முருகப்பெருமான் துணை

# மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

20.06.2021, ஞாயிற்றுக்கிழமை

1. அருட்சுடரே அரங்கா போற்றி
அன்னதான வள்ளலே போற்றி
அருட்பெருஞ் சக்தியாய் வந்த
ஆறுமுக ஞானியே போற்றி போற்றி

2. போற்றியே யோக பிரசன்ன ஆசி
புகலுவேன் பிலவ மிதுன திங்கள்
உற்றதொரு சஷ்டிதிகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 6ம் நாள், 20.06.2021, ஞாயிற்றுக்கிழமை)
உரைத்திடுவேன் திருமங்கை ஆழ்வார் யானும்

3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தருமம் வளர்க்கும்
ஞானதேசிகன் வழிகள் தன்னை
நம்பிக்கை வைத்து வருதல் காண

4. காணவே மக்களிடை மாற்றம்
கந்த வேலன் சக்தியாக
ஞானதேசிகன் உபதேசங்கள்
ஞானமாக நிலைத்து நின்று

5. நின்றுமே அழியாமை கிட்டும்
நிம்மதி பாதுகாப்புதரும் வாழ்வாக
நன்றான இயற்கை சூழலாக
ஞானிகள் ஆசிபட அமைந்து

6. அமைந்து இந்த வையகமே
ஆறுதலும் நல்ல மாறுதலுமாக
அமைந்து அற்புதம் நிகழும்
ஆறுமுகனார் வழிபாடு பெருக

7. பெருகவே மக்களிடை தெளிவு
பேரருளாக திருவருள் கூடி
வருமுலகில் மாற்றம் காணும்
வதைக்கும் பேரழிவும் அகலும்

8. அகலவே அரங்கன் அமைத்த
ஆற்றல் மிக்க ஞானப்படைகள்
வகையான சேவை ஆற்றி
வளர்ச்சி பாதைகளை நோக்கி

9. நோக்கி இந்த நிலவுலகம் சென்று
நீதிநிர்வாகம் தருமம் குன்றா
ஆக்கமான சேவைகள் பெருகி
அகிலமே ஞானவான்கள் எண்ணிக்கை

10. எண்ணிக்கை பெருகி இனிதே
எங்கும் எதிலும் தருமம் நின்று
வண்ணமுடன் சன்மார்க்கமும்
வளர்ந்து வையகம் மாறும்

11. மாறுதலும் மகத்துவமும் அரங்கனே
மக்களே தேடி ஓடி வர
ஆறுமுகன் ஆசிபட ஞானஆட்சி
அமைந்திடும் அரங்கன் தலைமையில்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–